1975 அக்டோபர் 24]

இடங்களில் வார இதழ், நாளிதழ் கூட தேவையான அளவுக்கு வாங்கிக்கொடுக்க முடியாத நிலை இருந்ததை இப்பொழுது ஓரளவு மாற்றியிருக்கிறோம். என்றாலும், சிலபல இடங்களில் கட்டடத்திற்காகப் பணத்தை முடக்கிவிட வேண்டியதாக இருப்பதால் நிர்வாகச் செலவுக்கே பணம் போதவில்லை என்ற நிலை இருக்கிறது. ஆகவே, எந்தெந்த ஊர்களில் கட்டட வசதி—பள்ளிக்கூடங்களுக்குக் கட்டித் தருவதுபோன்று—கட்டித்தர முன்வருகிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை தரும் முயற்சியை மாவட்ட நூலக இயக்கங்கள் மேற்கொண்டிருக் கின்றன.

*** 27 வினா—திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு **கல்வி-**சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட **வினாக் களுக்கு விடையளிப்பாரா—**

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் எத்தனை நூல் **நிலையங்கள் உள்ளன?**

(இ) அவைகளை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 88.

(இ) இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, கிளை நூலகங்கள் ஓரளவு போதுமான அளவுக்கு இருந்தாலும் அவற்றிலே உள்ள நூல்கள் போதுமான அளவு இல்லை. அறிவியலை வளர்க்கும் நல்ல புத்தகங்களை வாங்கி வைக்கப் பொருளாதார வசதி அவைகளுக்கு இல்லை. அப்படிப்பட்ட புத்தகங்களைக் கொடுக்கும்போது டைரக்டிரேட்டுக்கும் அங்கே இருக்கிற சேர்மன் போன்றவர் களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்படுகின்ற காரணத்தால், கொடுக்காமல் நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக அந்தந்த மாவட்டங்களிலுள்ள பொருளாதார வசதிக்கேற்ப புத்தகங்கள் வாங்கிக் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முன்பே கூறியதைப்போல ஒரு குறிப்பிட்ட தொகையை வைத்து அந்தந்த நூலகங்கள் இயங்க நூல்களை வாங்கிக்கொள்ளலாம். சென்ற ஆண்டிலிருந்து மத்திய நூலகம் 10 அல்லது 12 லட்சம் ரூபாய்க்கான நூல்களை வாங்கி கிளை நூலகங்களுக்கு அனுப்பி வைக்கின்ற ஒரு ஏற்பாடு இருந்து வருகிறது. வடார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் புதிய நூலகங்கள் 10 தொடங்கப்பட வேண்டுமென்ற கருத்தினையும் அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நூலகங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்குவது என்பது இன்னமும் முடிவு செய்யப்படாமல் இருப்பதால் அந்தப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

பொறியியல் கல்லூரிகளில் இடங்கள்

* 28 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975-76 ஆம் கல்வி ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1974-75-ல் இம்மாநிலத்திலுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளில் இருந்து வந்த மொத்தம் 1,290 இடங்கள், 1975-76 ஆம் கல்வி ஆண்டு முதல் 1,390 இடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த பொறியியல் கல்லூரியில் இடங்களை அதிகரிக்க மத்திய அரசின் அனுமதி பெற வேண்டியுள்ளதா ? பொறியியல் பட்டம் பெற்று, வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கையை அரசு அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மத்திய அரசின் அனுமதி தேவையில்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 1967-68 ஆம் ஆண்டில்